## சமூக வீடமைப்பு

யோக் பிரதேசத்தில், இலாபநோக்கம்-அற்ற, கூட்டுறவு மற்றும் நகரசபை அமைப்புகளால் நிர்வகிக்கப்படும் 7,000க்கும் அதிகமான கட்டுப்படியான வாடகை அத்துடன் உதவிநிதி வழங்கப்படும் வாடகை (subsidized) வீடமைப்புப் பகுதிகள் (units), உள்ளன.

**இலாபநோக்கம்-அற்ற வீடமைப்பு,** மத-குழுக்கள் மற்றும் சேவைச் சங்கங்கள் (clubs) போன்ற இலாபநோக்கம்-அற்ற அமைப்புகளுக்குச் சொந்தமானதுடன் அவர்களால் இவை நிர்வகிக்கவும் படுகின்றன.

**கூட்டுறவு வீடமைப்பு,** அவைகளில் வசிப்பவர்களுக்குச் சொந்தமானதுடன் அவர்களால் நிர்வகிக்கவும் படுகின்றன. பொதுவாக ஒரு செயற்குழுவில் அங்கத்தினராய் இருப்பதாலோ அல்லது வேறு செயற்பாடுகளில் ஈடுபடுவதாலோ தங்களுடைய வீடமைப்பு சமூகத்தை நிர்வாகம் செய்வதில் அங்கு வசிப்போர் தீவிரமாகப் பங்குகொள்ள வேண்டும் என கூட்டுறவுகள், எதிர்ப்பார்க்கின்றார்கள்.

HOUSING YORK INC.
*Building Strong Communities*

**வீடமைப்பு யோக் கூட்டுத்தாபனம்,** யோக் பிரதேச வீடமைப்பு வியாபாரஸ்தாபனம் யோக் பிரதேசத்தின் ஊடாக, கட்டுப்படியாகக் கூடிய வாடகை அத்துடன் உதவி நிதி வழங்கப்படும் வாடகை வீடமைப்புப் பகுதிகள் 1,900க்கும் அதிகமானவற்றை சொந்தமாக வைத்திருப்பதுடன் அவற்றையும் நிர்வகிக்கின்றது.

## சமூக வீடமைப்பைப் பற்றிய மேலதிக தகவல்களுக்கு, யோக் பிரதேச நகரசபை, சமூக மற்றும் சுகாதார சேவைகள் திணைக்களத்தைத் தொடர்பு கொள்ளவும்.

55 Eagle Street West
Newmarket, ON L3Y 8W5

1-888-256-1112
TTY: 905-762-0401

www.york.ca

York Region

CHS HLTC 08 2009

York Region

# யோக் பிரதேசத்தில் சமூக வீடமைப்பு



சமூக மற்றும் சுகாதார சேவைகள்

## நான், சமூக வீடமைப்பிற்கு விண்ணப்பம் செய்வது எப்படி?

யோக் பிரதேசத்தில் உள்ள சகல சமூக வீடமைப்பு கொடுப்பவர்கள், வருமானத்திற்கு-ஏற்ற-வாடகை உதவிக்கு விண்ணப்பம் செய்வதற்கு ஒரு பொதுவான விண்ணப்பப் படிவத்தை உபயோகிக்கின்றார்கள்.

### ஒரு விண்ணப்பப் படிவத்தைப் பெறுவதற்கு நான்கு வழிகள் இருக்கின்றன:

1. 1-888-256-1112. ஐ, அழைத்து, ஒரு விண்ணப்பப் படிவத்தை, உங்களுக்குத் தபாலில் அனுப்பவைத்தல்
2. 55 Eagle Street West, Newmarket ல் உள்ள, யோக் பிரதேசத்தின் சமூக அத்துடன் சுகாதார சேவைத் திணைக்களத்திற்குச் சென்று ஒரு விண்ணப்பப் படிவத்தை எடுத்தல்
3. யோக் பிரதேசத்திற்குள் சமூக வீடமைப்பு கொடுப்பவர் எவரையாவது தொடர்பு கொள்ளல்
4. www.york.ca யில் உள்ள எங்களது இணையத்தளத்தில் இருந்து, நேரடியாக ஒன்றை அச்செடுத்தல் (print).

எவ்வாறு அதனை நிரப்புவது அத்துடன் எங்கு அனுப்பவது பற்றிய விரிவான பணிப்புகளை விண்ணப்பப் படிவம் உள்ளடக்கியுள்ளது.



## சமூக வீடமைப்பிற்குத் தகுதியுடையவர் யார்?

### சமூக வீடமைப்பிற்குத் தகுதியாய் இருப்பதற்கு:

- வீட்டில் வசிக்கும் குடும்ப அங்கத்தினர்கள் எல்லோரும், கட்டாயமாக கனடாவில் நிரந்தர குடியுரிமை உள்ளவர்களாகவோ அல்லது அகதிக் கோரிக்கை அந்தஸ்து உடையவர்களாகவோ இருக்க வேண்டும்.
- வீட்டில் வசிக்கும் உங்களது குடும்பத்தில் ஒருவராவது, 16ஆண்டுகள் வயதுடையவராகவோ அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராகவோ இருக்கவேண்டும்
- ஆதரவு சேவைகள் பெற்றோ அல்லது பெறாமலோ, நீங்கள் தனித்து வாழக்கூடியவராய் இருக்கவேண்டும்
- முதியவர்களின் வதிப்பிடத்திற்கு, ஒரு விண்ணப்பக்காரராவது 60 ஆண்டுகள் வயதுடையவராகவோ அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராகவோ இருக்கவேண்டும்.
- உங்களது வீட்டில் வசிக்கும் குடும்ப அங்கத்தினர்களில் எவராவது, எந்தச் சமூக வீடமைப்பு நிலக்கிழாருக்காவது (land lord) கட்ட வேண்டிய வாடகைப்பணத்தை கட்டத்தவறியவராக இருக்கக் கூடாது.

## சமூக வீடமைப்பை பெறுவதற்காக காத்திருக்கும் பட்டியல் ஒன்று இருக்கின்றதா?

ஆம். காத்திருக்கும் பட்டியல் ஒன்று இருக்கின்றது. உங்களது விண்ணப்பம் கிடைத்த திகதியின் பிரகாரம், முதலில்-வருபவர்-முதலில்-பெறுவார் என்ற அடிப்படையில் வீடமைப்பு கிடைக்கக் கூடியதாக இருக்கும். நீங்கள் விண்ணப்பம் செய்யும் சமூக வீடமைப்புச் சமூகத்தை பொறுத்தும் உங்களுக்குத் தேவையான வாடகைப் பகுதியின் அளவைப் பொறுத்தும் காத்திருக்கும் காலம் பெருமளவில் வேறுபடலாம்.

வீட்டு வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, விசேட முன்னுரிமை காத்திருக்கும் பட்டியற் பிரிவு ஒன்று உள்ளது.

## யோக் பிரதேசத்தில், சமூக வீடமைப்பு கிடைக்கக் கூடியதாய் இருப்பது எங்கு?

யோக் பிரதேசத்திற்கு ஊடாக, ஒரு பல்வேறு வீடமைப்புச் சமூகங்களில், சமூக வீடமைப்பு கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது. பொருத்தமான வீடமைப்பைத் தேர்வுசெய்ய உங்களுக்கு உதவுவதற்கு, வீடமைப்பு விபரங்கள் அடங்கியுள்ள ஒரு புத்தகம் (directory) கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது. அத்துடன் அதனை, பின்வருபவனவற்றில் பார்க்கலாம் :
55 Eagle Street West, Newmarket அல்லது எங்களது இணையத்தளம்இ www.york.ca.

## மாற்றியமைக்கப்பட்ட பகுதிகள்

உடல் இயலாமைகள் உள்ளவர்களுக்கும் இடம் கொடுப்பதற்கு, ஒரு எண்ணிக்கை அளவான மாற்றியமைக்கப்பட்ட சமூக வீடமைப்புப் பகுதிகள் இருக்கின்றன. இந்த மாற்றியமைப்புகள், சில்லு வண்டி.்.ஸ்கூட்டர்களுக்கான அணுகு வழி, அறைகளின் அமைப்பு, வடிவம், கதவு வாசல்களின் அளவுகளை உள்ளடக்கிய கட்டிட நிர்மாணிப்புகளையும், கதவு, கதவுப்பிடிகள் மற்றும் ஜன்னல்கள் போன்ற கட்டிட பண்புகளையும் உள்ளடக்கலாம்.

**மாற்றியமைக்கப்பட்ட பகுதிகளைப் பற்றிய மேலதிக தகவல்கள் கிடைக்கக்கூடியதாக இருப்பது:**

**55 Eagle Street West, Newmarket அல்லது 1-877-464-9675, Ext. 2499 ஐ அழைப்பதால் அல்லது எங்களது இணையத்தளத்தில்இ www.york.ca.**

**www.york.ca > Services > Housing க்குச் செல்லவும**